Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No. CC .NO. 86/2025
DEPOSITION OF COMPLAINANT SIDE EVIDENCE No. 06 , Page.No. 20/25

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. இராமலிங்கம் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | திரு. துரைசாமி | தொழில் | கூலி வேலை |
| கிராமம் | பெரிய அகரம் புதுர் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 51 |
| எதிரி ஆஜர் | | | 1,2 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 15th day of September 2025

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**அ.சா.6 திரு. இராமலிங்கம் முதல் விசாரணை**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். சுமார் 10 மாதங்களுக்கு முன்பு 2024 வருடம் தேதி மாதம் நினைவில்லை. ஒரு நாள் காலை 11.00 மணியளவில் நானும் எனது நண்பர் செந்தில் குமார் என்பவரும் கரியம் பட்டி வேகத்தடை அருகே உள்ள தேநீர் கடையில் தேநீர் அருந்திகொண்டிருந்த போது அந்த இடத்தில் போலீசார் வாகன தணிக்கையில் ஈடுபட்டு இருந்தனர். அப்போது இருசக்கர வாகனத்தில் வந்த இருவரை போலீசுார் ஆவணங்கள் கேட்டு விசாரித்தார்கள். அதற்கு அந்த நபர்கள் முன்னுக்கு பின் முரணாக பதில் கூறினார்கள். பின்பு போலீசார் அந்த இரண்டு நபர்கள் விசாரித்ததில் அவர்கள் செயின் பறிப்பு சம்பவத்தில் ஈடுபட்டதாகவும், அவர்கள் வந்த இருசக்கர வாகனம் அவர்கள் திருடிய வாகனம் என்றும், வாக்குமூலம் அளித்தார்கள் அதில் நானும் செந்தில்குமார் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். இன்று இந்நீதிமன்றத்தல் ஆஜராகி இருக்கும் எதிரிகள் தான் அன்று வாக்குமூலம்

அளித்த இரண்டு நபர்கள் ஆவார். என்னிடம் காட்டப்படும் 1 எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் ஆகியவை தான் நான் அந்த சமயத்தில் செய்ததாகும். ( **ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ. 04 குறியீடு செய்யப்படுகிறது. கைபற்றுதல் மகசர் அ.சா.ஆ 05 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2024 ம் வருடம் 10 மாதங்களுக்கு முன்பு என்னை விசாரித்த போலீசார் யார் என்றால் கந்திலி போலீசார் ஆவார். இப்போது எந்த வழக்கில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று எனக்கு தெரயாது என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் கந்திலி போலீசார் வாகன தணிக்கையில் ஈடுபட்டுஇருந்தார்கள். கந்திலி போலீசார் வாகன தணிக்கையில் ஈடுபட்ட வழக்கு சம்மந்தமாக தான் தற்போது சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். 2024 ம் வருடம் 10 மாதங்களுக்கு முன்பு நடந்த செயின் பறிப்பு சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர் என் உறவினர் என்றால் சரிதான். நாளிதளில் பார்த்து தெரிந்துகொண்டேன். நானும் செந்தில்குமார் என்பவரும் உறவினர்கள் என்றால் சரிதான். பாதிக்கப்பட்ட நபரின் பெயர் என்ன என்றால் மரகதம்மாள் ஆகும். நான் எழுதப்படாத வெற்று தாளில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். வெற்றுதாளில் நான் கையொப்பம் செய்ததால் அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. விவரங்கள் எழுதிவிட்டு தான் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். நான் எழுதப்படாத வெள்ளை தாளில் கையொப்பம் இடவில்லை. மரகதம்மாள் செயின் பறிப்பு சம்பவம் குறித்து தான் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். மரகதம்மாள் என்பரின் உறவினர் என்பதால் நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து விட்டு தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில கையொப்பம் இடவில்லை. கரியம்பட்டி வேக தடை அருகே தான் கையொப்பம் செய்தேன். என்னென்ன பொருட்கள் எதிரியிடம் இருந்து போலீசார் கைப்பற்றீனார்கள் என்று தெரியுமா என்றால் 1 செயின் மட்டும் கைப்பற்றினார்கள். எதிரிகளை நான் பார்த்ததில்லை என்றாலும் போலீசார் கேட்டுகொண்டதின் பேரில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.